
# 20 ஒருமைப்பாடு



பல அழகிய வர்ணங்களைக் கொண்ட விதவிதமான பூக்கள் பூத்துக் குலுங்கும் பூங்கா ஒன்றைக் காண்பதாகக் கற்பனை செய்யுங்கள். பல நிறங்கள் சேர்ந்த அந்தத் பூங்காவின் அழகை இலகுவில் மறக்க முடியுமா?

பூத்துக் குலுங்கும் இலங்கைத் தீவிற்குள் வெவ்வேறு இனம், மதம், மொழி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், நாம் அனைவரும் கடவுளின் படைப்புக்களாக இருக்கிறோம்.



இவ்வழகிய இலங்கை எனும் பூங்காவில் நாம் அனைவருமே பல்வேறு வகையில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணவேண்டும். அப்போதுதான் இலங்கை அழகுடன் மிளிரும். உலகம் முழுவதையும் இவ்வாறு நோக்கினால், மனுக்குலம் ஒருமைப்பாடுடன் திகழும் என்பதில் சந்தேகமில்லை. சமத்துவமும் நீதியும் ஒற்றிணைவது பற்றி திருவிவிலியத்தின் மூலம் அறிந்து கொள்வோம்.

*நல்ல ஆயன் நானே*
*நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பான்.*
*யோவான் 10 : 11*



**வாசிக்கவும்**
எபேசியர்
**2 : 14, 15**

இயேசு மக்களுக்கிடையே நிலவுகின்ற சகல பேதங்களையும் மறந்து ஒற்றுமையுடன் வளரும் ஒரு சமுதாயத்தை நிறுவுவதற்காகச் செயல்பட்டார். அதையே நம்மிடமும் எதிர்பார்க்கிறார்.

*நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்.*
*யோவான் 17 : 22*

நம்முடைய தொடர்பு இயேசு கிறிஸ்துவோடு ஒன்றித்து இருப்பதாகும்.

தற்போதைய சூழலில் நம்மிடையே காணப்படுகின்ற பேதங்கள் :-
இனங்களுக்கிடையில்
- மதங்களுக்கிடையில்
- மதப்பிரிவுகளுக்கிடையில்
- குல கோத்திரங்களுக்கிடையில்
- மொழிகளுக்கிடையில் என்பனவாகும்.

இவ்வாறான பேதங்களை நீக்குவதற்கு நாம் ஒருவருடன் ஒருவர் புரிந்துணர்வுடன் செயற்பட்டால் சமத்துவமாக வாழ முடியும். அப்போது பல்வேறுபட்ட மொழிகள் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் வளமாக்கும். பல்வேறு மொழிகளைக் கற்பதன் மூலமாக அறிவினை விருத்தி செய்யவும், ஒருவரை ஒருவர் இனங்கண்டு கொள்ளவும், ஒவ்வொருவரின் பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்ளவும் புரிந்துணர்வுடன் நெருங்கிப் பழகவும் வழி வகுக்கின்றது.

பண்பாடுகளுக்கிடையில் காணப்படும் பல்வேறு சிறப்புக்கள் மூலம் மற்றவர்களின் உயர் மனப்பாங்கினை இனங்காண முடியும். கிறிஸ்தவ விழுமியங்களின் மூலம் முன்னேற்றமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பது நம்பிக்கை

## கடவுளால் படைக்கப்பட்ட மனுக்குலம்

கடவுள், மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல என்று ஏவாளை ஆதாமின் எலும்பிலிருந்து படைத்தார். இடையர் காலத்தில் வாழ்ந்த மக்கள் உணவிற்காக நாடோடிகளாக வாழ்ந்தனர். பின்பு பயிர்ச்செய்கையில் ஈடுபட ஆரம்பித்ததன் விளைவாக ஓரிடத்தில் வாழ்ந்தனர். அதன் பயனாக சமூகம், சமுதாயமாக வளர்ச்சியடைந்தது.

***வாசிப்போம்***
***1 கொரிந்தியர் 12 : 12 - 26***

உடலில் அநேக உறுப்புக்கள் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. நீதியை நிலைநாட்டுவதற்கு திருச்சபைகளும் வேறு சமயங்களும் எவ்வாறு சேர்ந்து செயல்படலாம் என்பதைப் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

**சிந்தனைக்கு**

*"உங்களால் பிறருடன் சேர்ந்து வாழ முடியுமா? இந்த அறைகூவலுக்கு விடை காணுங்கள்.*
*ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் தொடர்பு கொண்டு தங்கள் நாட்டிற்கு தேவையான பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்து தங்கள் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறது. நமது நாட்டு மக்கள் தொழில் வாய்ப்பிற்காகவும் உயர் கல்விக்காகவும் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். அவ்வாறெனில் நாம் குடும்பத்தில் சமுதாயத்தில் நாட்டில் தனித்து வாழ முடியுமா?*

**மனனம் செய்வோம்**

*"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவரிலொருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை".*
*யோவான் 15 : 1*

இயேசு கிறிஸ்து உலகில் தம் பணியினை மேற்கொண்ட வேளையில் எவ்வகையான மக்களுக்குப் போதித்தார்? எவர் மத்தியில் பணியினை மேற்கொண்டார்? ஆண்டவரின் அறிவுரைகள்நமக்கு எவற்றை போதிக்கின்றன?



எனக்குப் பிறன் யார்?
சமாரியப் பெண்

***வாசிப்போம்***
***கலாத்தியர் 5:15***

*நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள் எச்சரிக்கை.*
*கலாத்தியர் 5 : 15*

## நாம் எவ்வாறு செயல்பட வேண்டும்?



கிறிஸ்தவ விழுமியங்களைப் பற்றி தெரிந்து கொள்வோம். மக்கள் ஒவ்வொருவரையும் அவர்களின் செயற்பாடுகளையும் புரிந்து கொள்வோம். புரிந்துணர்வோடு ஒருவர் மேல் ஒருவர் அன்பாயிருப்போம். இயேசு கிறிஸ்து பாவிகளாகிய எங்கள் மேலுள்ள அன்பினால் சிலுவையில் தியாக பலியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அவ்வாறெனில் நாம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதில்லையே ஏன்? சிந்தியுங்கள்.

## விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை

இரு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென சிறு காரணங்களுக்காக பிரச்சினைக்குள்ளாகுவதை நாம் பார்த்திருக்கிறோம். இருவருமே விட்டுக் கொடுக்காவிட்டால் பிரச்சினை வளரும். பின் விளைவு விபரீதத்தில் முடியும். விட்டுக் கொடுத்தல் மற்றும் பகிர்ந்து கொள்ளல் மனப்பாங்கு இருக்குமேயாகில் அங்கு பிரச்சினை இலகுவாகத் தீர்ந்து விடும். ஆனால் பொதுவாழ்வில் சமுதாய அநீதிக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கினை நம் உள்ளத்தே வளரவிடக் கூடாது.

**வாசிப்போம்.**
***கலாத்தியர் 6 : 15***

*புதிய படைப்பாவதே இன்றியமையாதது. மனுக்குல மக்களுக்காகவும் இறையரசின் வாழ்விற்காகவும் நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.*

### என் நண்பன்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன் - எம் சகோதரன்

1. வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன்
அல்லல் படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் (2)

2. பிற குலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் சேர்ந்தாலும் சகோதரன்
பிற மொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் (2)

3. அழகை இழந்தவன் சகோதரன்
அறிவை இழந்தவன் என் நண்பன்
ஊனமாய் பிறந்தவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன் (2)



(மெதடிஸ்த பாட்டு புத்தகத்திலிருந்து)



இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு**

*"இயேசு கிறிஸ்து என் உள்ளத்தில் இருக்கிறார் என்பதற்கான (என்னிடம் காணப்பட வேண்டிய) "கிறிஸ்தவ பண்புகள்" என்ற தலைப்பின் கீழ் 200 சொற்களுக்குள் கட்டுரை எழுதுக.*